இணைப்பு.

(308ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 305-க்கான விடையைக் காண்க.)

விவர அறிக்கை.

ஸ்வீடன் நாட்டு உதவியுடன் இவ்வருடத்தில் சமூக நலக் காடுகள் அமைக்கும் திட்டத்தின்கீழ் சுமார் 105 எக்டேர் சமதள புறம்போக்கு நிலங்களில் 1981–82 ஆம் ஆண்டில் சூபாபுல் பயிரிடும் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. தகுந்த முன் நடவடிக்கை எடுக்குமாறு வனத்துறை அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

2. தமிழ்நாட்டில் சூபாபுல் ஏற்கனவே தர்மபுரி கோட்டம் வேலூர் வனவிரிவாக்கக் கோட்டம் ஆகிய இடங்களில் பரீட் சார்த்தமாக பயிராக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் சூபாபுல் பற்றிய கருத்தரங்கு ஒன்றும் ஜூன் மாதம் 26 மற்றும் 27 தேதி களில் மகாராஷ்டிராவில் உள்ள உருள்காஞ்சன் என்னும் இடத்தில் நடைபெற்றது. தமிழ்நாட்டிலிருந்து வனப்பாது காவலர் (சமூக நலக்காடுகள்) சென்னை மற்றும் தர்மபுரி மாவட்ட வன அலுவலரும் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண் டார்கள். கருத்தரங்கின் முடிவில் லூசியானா லுயோ-கொசெ பலா ஒரு பல்வகைத் தேவைச் செடி என்று முடிவுற்று, பின்னர் இம்மரங்களை சமூக நலத்திட்டத்தின் அதிக அளவில் எழுப்ப லாம் என சிபாரிசு செய்யப்பட்டது. இம்மரம் நன்றாக வளர மான் போன்ற வனவிலங்குகள் மேயாமல் பாதுகாப்பது மிக அவசியம். ஆதலால், அரசு வன நிலங்களில் இதனை வளர்ப்பது சிரமமாகும்.

3. தமிழ்நாட்டில் இத்தகைய மரங்களை பாதுகாப்பு மிக்க மாட்டுத் தீவன திட்டத்தின் கீழும் பயிராக்கலாம். இந்த மர மானது நீர்ப்பாசனம் இருந்தால் மிக நன்றாக வளரும் எனத் தெரிகிறது. நீர்ப்பாசனம் இல்லாவிடினும் பாதுகாப்புடன் வளர்த்தால் தகுந்த இடங்களில் அதிக மகசூல் கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வன விரிவாக்கக் கோட்ட வன அலுவலர்களுக்கு இம்மரங்கள் வளர்ப்பது சம்பந்தமாக அறிவுரைகளும் வழங்கப்பட்டுள்ளன. இது குறித்து ஆராய்ச்சி கள் மேலும் தொடர்ந்து நடைபெறுகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS